MELUR MUNICIPALITY

Minutes of the Council Meeting held on **24.01.2023** (Urgent)

<table>
<tr><td>Resolution No.</td><td>Serial Number and subject in the Agenda</td><td>Decision of the Council</td></tr>
<tr><td></td><td>24.01.2023 ஆம் தேதி செவ்வாய்க்கிழமை காலை 11.30 மணிக்கு<br>நடைபெற உள்ள அவசரக்கூட்டம்<br>முன்னிலை: திரு.உ.முகமதுயாசின், நகர்மன்றத்தலைவர்</td><td></td></tr>
<tr><td>233</td><td>
<u>மன்றப்பொருள் எண்</u>.1

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் ஜனவரி 14 அன்று தூய்மையான நகரங்களுக்கான மக்கள் இயக்கம் திட்டத்தில் “உற்பத்தியாகும் இடத்தில் குப்பைகளை தரம்பிரித்தல்” என்ற தலைப்பால் செயல்படுத்தப்பட வேண்டும் என்றும் இத்துடன் 10.01.2023 முதல் 14.01.2023 முடிய புகைஇல்லாத போகி (Smokeless Bhogi) தொடர்பான விழிப்புணர்வு ஏற்படுத்த கீழ்க்கண்ட பணிகள் மேற்கொள்ள 09.01.2023 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து வரப்பெற்ற விலைப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும்.

<table>
<tr><td>வ. எண்.</td><td>விபரம்</td><td>ஸ்ரீ முருகன் பிரஸ், மேலூர் எண்ணம் ஒன்றிற்கு தொகை ரூ.</td><td>ஜே.பி.புக் பைண்டிங் அன்ட் பிரிண்டிங் ஒர்க்ஸ், மேலூர் எண்ணம் ஒன்றிற்கு தொகை ரூ.</td></tr>
<tr><td>1.</td><td>விளம்பர பேனர்கள் (3x6)</td><td>400</td><td>350</td></tr>
<tr><td>2.</td><td>விளம்பர விழிப்புணர்வு நோட்டீஸ் (A4)</td><td>4.50</td><td>3.50</td></tr>
<tr><td>3.</td><td>சேகரிப்பு மையங்களுக்கான பேனர்கள்</td><td>400</td><td>350</td></tr>
<tr><td>4.</td><td>ஆட்டோ மூலம் மைக்செட் கட்டி விளம்பரம் (10.01.2023 முல் 14.01.2023 முடிய)</td><td>3000</td><td>2800</td></tr>
</table>

அலுவலகக்குறிப்பு

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் மிகக்குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஜே.பி.புக் பைண்டிங் அன்ட் பிரிண்டிங் ஒர்க்ஸ் என்ற நிறுவனத்திற்கு உத்தரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
</td><td>அனுமதிக்கப்பட்டது.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| 234 | <u>**மன்றப்பொருள் எண்**.2</u><br><br>**சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின்** 10.01.2023**ம் தேதிய ந.க.எண்**.32945/2022/EA2-SWM-10 **உத்தரவில் மேலூர் நகராட்சி பகுதியில் திடக்கழிவுமேலாண்மை திட்டத்தின் கீழ் குப்பைகள் உருவாகும் இடங்களிலேயே மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து உரமாக்கும் மையம் மற்றும் மறு சுழற்சி செய்யும் இடத்திற்கு கொண்டு வர ஒரு டன்னிற்கு ரூ**.4740.49 **என நிர்ணயம் செய்து இது குறித்து நிர்வாக அனுமதி வழங்கி ஒப்பந்த நிறுவனத்தை மூன்று ஆண்டுகளுக்கு தேர்வுசெய்ய உத்தரவிடப்பட்டுள்ளது**.<br><br>**இப்பணியை மேற்கொள்ள மேலூர் நகராட்சிக்கு ஆண்டு ஒன்றிற்கு சுமார் ரூ**.256.26 **லட்சம் செலவாகும் என்பதினால் இத்தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளும்படியும்**, **பொதுநிதி பற்றாக்குறை ஏற்பட்டால்** 15CFC SBM Tied grant **லிருந்து செலவு மேற்கொள்ளவும் தெரிவிக்கப்பட்டுள்ளது**. **மேலும் இதன் பொருட்டு மூன்று ஆண்டுகளுக்கு ஒப்பந்த நிறுவனத்தை தேர்வு செய்ய ஒப்பந்தப்புள்ளி கோரவும்**, **ஓராண்டுக்கு மட்டும் உத்தரவு வழங்கவும்**, **தொடர்ந்து இரண்டாம்**, **மூன்றாம் ஆண்டிற்கு நிறுவனத்தின் பணிகள் மற்றும் நகர்மன்றத்தின் ஒப்புதலுடன் நீட்டிப்பு செய்து வழங்கும்படியும் ஒப்பந்த நிறுவனத்திற்கு தேவையான வாகனங்களை நகராட்சி மூலம் வழங்கினால்**, **அதற்கான வாடகை மூன்று சக்கர சைக்கிளுக்கு நாளொன்றுக்கு** , **வாகனம் ஒன்றிற்கு ரூ**.15-**ம் பேட்டரி வாகனத்திற்கு நாளொன்றுக்கு** , **வாகனம் ஒன்றிற்கு தினசரி ரூ**.100/--**ம் வாடகையும்**, **இலகுரகு வாகனம் ஒன்றிற்கு** , **நாளொன்றுக்கு ரூ**.200/--**ம் வாடகையும்**, **கனரக வாகனம் ஒன்றிற்கு நாளொன்றுக்கு ரூ**.400/- **வாடகையும் கணக்கிட்டு**, **பட்டியல் வழங்கும்போது கழித்து வழங்கவும் தெரிவிக்கப்பட்டுள்ளது**.<br><br>**எனவே மேலூர் நகராட்சிக்கு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் திடக்கழிவுகளை உற்பத்தியாகும் இடத்திலே மக்கும்**, **மக்காதவை என தனித்தனியாக பிரித்து சேகரம் செய்து**, **உரமாக்கும் மையம் மற்றும் மறுசுழற்சி செய்யும் மையத்திற்கு கொண்டு சேர்க்கும் பணிகள் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர்**, **சென்னை**-28. **அவர்களின் செயல்முறைகளின்படியும்**, **தமிழ்நாடு ஒப்பந்தப்புள்ளி வெளிப்படைத்தன்மை சட்டம்** 1988 **மற்றும் விதிகள்** 2000-**ன்படியும்**, **தகுதிவாய்ந்த ஒப்பந்த நிறுவனத்தினை மூன்றாண்டுகளுக்கு தேர்வுசெய்யவும்**, **இதன் பொருட்டும் ஏற்படும் செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதிக்கு**.<br><br>**அலுவலகக்குறிப்பு**<br>**மன்றம் அனுமதிக்கலாம்**.<br>**ந.க.எண்**.122/2023/**எச்**1 | அனுமதிக்கப்பட்டது. |

235

**<u>மன்றப்பொருள் எண்</u>**.3

மேலூர் நகராட்சிக்கு சொந்தமான பல்வகை கேட்பு பதிவேட்டின்படி கீழ்க்கண்ட ஆண்டு குத்தகை இனங்களின் உரிமக்காலம் **31.03.2023**ம் தேதியுடன் முடிவடைவதால் அரசாணை(நிலை) எண்.**181** நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை நாள்.**19.09.2008**ன்படி **01.04.2023** முதல் **31.03.2026** வரையிலான காலத்திற்கு உரிமம் அனுபவித்துக் கொள்ளும் இனங்களுக்கு பொதுஏலம்/ஒப்பந்தப்புள்ளி கோர உரிய நடவடிககை மேற்கொள்ளவும், இதுதொடர்பாக தினசரி நாளிதழ் மற்றும் அரசிதழில் விளம்பரம் செய்வதற்கான உத்தேச செலவினம் ரூ.**25000**க்கு மன்றத்தின் அனுமதிக்கு.

| **வ. எண்** | **இனம்** | **முன் வைப்பு தொகை ரூ.** | **சொத்து மதிப்பு சான்று ரூ.** | **சொத்து மதிப்பு சான்று அற்றவர் செலுத்த வேண்டிய கூடுதல் பொறுப்பு தொகை ரூ.** |
|---|---|---|---|---|
| 1. | சாலைக்கரையான் ஊரணியில் மீன்பிடிக்கும் உரிமம் | 25000 | 1,00,000 | 2,00,000 |
| 2. | ஆடறுக்கும் சாலையில் கட்டணம் வசூல்செய்யும் உரிமம் | 100000 | 1,00,000 | 2,00,000 |

அலுவலகக்குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.129/2023/அ2)

அனுமதிக்கப்பட்டது.

---

236

**<u>மன்றப்பொருள் எண்</u>**.4

இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட தேசிய நகர்ப்புற வாழ்வாதார திட்டத்தின் கீழ் நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு மற்றும் நடைபாதை விற்பனை ஒழுங்குபடுத்துதல்) சட்டம் **2014**ன் பிரிவு **38(1)**ன் கீழ் பிறப்பிக்கப்பட்ட தமிழ்நாடு நடைபாதை வியாபாரிகள் (வாழ்வாதார பாதுகாப்பு நடைபாதை விற்பனையை ஒழுங்குபடுத்துதல் மற்றும் உரிமம் வழங்குதல் திட்டம **2015**ன் விதி **–11**ன் கீழ் அமைக்கப்பட வேண்டிய நகர விற்பனைக்குழுவின் எண்ணிக்கையிலான உறுப்பினர்களை தேர்வு செய்வது தொடர்பாக தேர்தல் நடத்துவது மற்றும் தினசரி நாளிதழில் விளம்பரம் செய்தல் போன்ற பணிகளுக்கு ஆகும் உத்தேச செலவினத்திற்கு மன்றத்தின் அனுமதிக்கு.

அலுவலகக்குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) மேற்படி செலவினத்தை வருவாய் நிதி மூலம் மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

அனுமதிக்கப்பட்டது.

| | | |
|---|---|---|
| 237 | **<u>மன்றப்பொருள் எண்</u>**.5<br><br>மேலூர் நகராட்சிக்குட்பட்ட நகர புல எண்.356/8,356/9 நகரளவு வார்டு பி, பிளாக் 25, நகரளவு எண்.3/11ல் உள்ள 1.67 ஏக்கர் இடத்தினை மேலூர் நகர் முழுமைத்திட்டத்தில் விவசாய உபயோகப் பகுதியிலிருநது குடியுருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர், மதுரை மண்டல அவர்கள் கடிதத்தில் தெரிவித்துள்ளபடி, தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழில் விளம்பரம் செய்து மன்ற ஒப்புதலுடன் அனுப்பக் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்பேரில் திரு.எஸ்.அப்துல்காதர், திரு.ஜமாலியாமுகமதுமுகிரின்,மற்றும் திரு.காதர்கனி என்பவர்கள் கீழ்க்கண்டவாறு விளம்பரம் செய்துள்ளார்கள்.<br>1. தி. நியூ. இண்டியன் எக்ஸ்பிரஸ் ஆங்கில நாளிதழ் டிசம்பர்14 பக்கம் 4<br>2. இந்து தமிழ்திசை (தமிழ் நாளிதழ்) டிசம்பர்14 பக்கம் 1<br><br>மேற்கண்ட விளம்பரத்திற்கு ஆலோசனை மற்றும் ஆட்சேபனை ஏதும் பெறப்படவில்லை. எனவே திரு.எஸ்.அப்துல்காதர், திரு.ஜமாலியாமுகமதுமுகிரின்,மற்றும் திரு.காதர்கனி என்பவரின் இடத்தினை விவசாய உபயோகப் பகுதியிலிருந்து குடியிருப்பு உபயோகப் பகுதியாக மாற்றம் செய்திட ஆட்சேபனை இல்லை என தெரிவிக்கலாம். மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.<br>அலுவலகக்குறிப்பு<br>திரு.எஸ்.அப்துல்காதர், திரு.ஜமாலியாமுகமதுமுகிரின்,மற்றும் திரு.காதர்கனி என்பவரின் 14.12.2022ம் தேதிய விளம்பரத்திற்கு எவ்வித ஆலோசனையோ அல்லது ஆட்சேபனையோ வரப்பெறாததால் இடத்தினை விவசாய உபயோகப் பகுதியிலிருந்து வணிக உபயோகப் பகுதியாக மாற்றம் செய்ய நகர் ஊரமைப்பு உதவி இயக்குநர் மதுரைஅவர்களுக்கு பரிந்துரை செய்யலாம். | அனுமதிக்கப்பட்டது. |

ஆணையாளர்,
மேலூர் நகராட்சி